முருகப்பெருமான் துணை

**மகான் சங்கமுனிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.11.2022**, வியாழக்கிழமை

1. பாருலகை காக்க வந்த ஞானியே
பாமரர்க்கும் ஞானம் அருளி
மாறுதலை செய்து வருகின்ற
மாதவசியே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அருளுவேன் அனுகூல ஆசி
வரங்களென சுபகிருது துலைதிங்கள்
வல்லமைபட மூவையீர் திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 17 ம் நாள் 03.11.2022, வியாழக்கிழமை)
3. வாரமதில் சங்கமுனிச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகோர் நலம்பெற
பாரதம் தொட்டு உலகம் எங்கிலும்
பண்பான மக்கள் படை நிறுவி
4. நிறுவி ஞான சமூகம் படைக்க
நீதிமானாக அருளும் ஞானி
ஆறுமுக அரங்கன் மலரடி
அணிவகுத்து மக்களெல்லாம் வர
5. வருகவே ஆசி அருளால்
வல்லமைபட யாவருக்கும் ஆற்றல்
முருகப் பெருமான் சக்தியாகவே
முழுமைபட நிலைகள் மாறி
6. மாறியே குருமார்க்கம் தானும்
மகான்களின் சக்தி வடிவாக
ஆறுதல் உலகோர்க்குப் பெருகி
அற்புதம் தனை அகிலம் அடையும்
7. அடையவே மாற்றம் தன்னை
ஆளுமை சக்திகளும் அடைய
தடையற அரங்கன் வழிவர
தலைமைகள் உயர்வாகத் தேறி
8. தேறியே ஞானிகள் ஆசிபட
தேசிகனின் துணை கொண்ட
ஆறுதலான வழிகாட்டல் தன்னில்
அகிலமே ஞான ஆட்சி காண்கும்
9. காண்கவே கலிக்கொடுமைகளை
கட்டுப்படுத்தி முழுமைபட விரட்டி
ஆன்மீக ஞான பூமி ஆக்கி
அனைவரும் தெய்வபலமடைய

10. அடையவே அருளும் வழிகளை
அனைவரும் ஏற்றால் போதும்
தடைகள் எல்லாம் தானாய் விலகி
தரணியே பெரும் பாதுகாப்பு கண்டு

11. கண்டுமே பேருலகே ஞானஆட்சி
கந்தவேலன் தலைமை கொண்ட
உண்டாகும் ஞானிகள் ஆட்சி
உலகை மாற்றும் விதமாக மாறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–